**மார்ச் – 05**

# TNPSC துளிகள்

- முன்னாள் நிதியமைச்சர் ப. சிதம்பரம் எழுதிய "Undaunted : Saving the Idea of India" என்ற புத்தகத்தை முன்னாள் குடியரசுத் துணைத் தலைவர் ஹமீது அன்சாரி வெளியிட்டார்.
- இந்திய ஏவுகணைத் திட்டங்களில் தன்னுடைய தனித்துவ தலைமைப் பண்பிற்காக "2019 ஏவுகணை அமைப்புகள் விருது" எனும் பெருமை விருதினை பாதுகப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் தலைவர் G. சதீஷ் ரெட்டிக்கு அமெரிக்க வானியல் மற்றும் விண்வெளியியல் நிறுவனம் வழங்கியிருக்கின்றது.
- வங்கிப் பாதுகாப்புப் பெட்டகத்தில் நகைகள், பத்திர ஆவணங்கள் மற்றும் இதர மதிப்பு மிகுந்த பொருட்களைப் பாதுகாக்கும் நோக்குடன் எந்த ஒரு காப்பீட்டு நிறுவனத்தாலும் அளிக்கப்படும் முதலாவது வங்கிப் பாதுகாப்புப் பெட்டகத்திற்கென்று தனியான ஒரு காப்பீடாக இப்கோ டோக்கியோ பொதுக் காப்பீட்டு நிறுவனம் "வங்கிப் பாதுகாப்புப் பெட்டகத்" திட்டத்தை வெளியிட்டது.
- மூன்றாவது முறையாக இந்திய தேசியப் பாதுகாப்புக் குழுவால் வழங்கப்படும் பெருமைமிகு சர்வஸ்ரேஷ்த சுரக்ஷா புரஸ்கர் (வெண்கலக் கோப்பை) என்ற விருதை 2018-ம் ஆண்டிற்கான பிரிவில் விவசாயத்திற்கான ரசாயன உரங்கள் நிறுவனமான பாரிஜாதம் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.
- டிவிஎஸ் மோட்டார் நிறுவனம் "நீடித்தத் தன்மைக்கான பசுமை சகாப்தம்" என்ற சர்வதேச நீடித்த நிலைத் தன்மைக்கான விருதை போர்ச்சுகலின் லிஸ்பன் நகரில் பெற்றிருக்கின்றது.
    - மேலும் இந்நிறுவனம் உற்பத்திப் பொருளின் தரத்தில் புதிய முத்திரைகளை உருவாக்கிட மேற்கொண்ட தனது பெரு முயற்சிகளின் அங்கீகாரத்திற்கு வேண்டி "தரம் மற்றும் வியாபார நிபுணத்துவ விருதினையும்" வென்றுள்ளது.

# தேசியச் செய்திகள்

## பிற்படுத்தப்பட்டோருக்கான தேசிய ஆணையம்

- மத்திய அரசு தேசிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஆணையத்தைத் (National Commission for Backward Classes - NCBC) துவக்கி வைத்தது.
- அந்த அமைப்பிற்கு அரசியலமைப்பு தகுதி நிலையை வழங்கிடுவதற்காக பாராளுமன்றத்தில் ஒரு மசோதாவை அறிமுகப்படுத்திய பிறகு இது செயலற்றதாக மாறிய இரண்டு ஆண்டுகள் கழித்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- இந்தப் புதிய ஆணையம் பகவான் லால் சாஹ்னியைத் தலைவராகக் கொண்டது. இதன் மற்ற உறுப்பினர்கள் பின்வருமாறு
    - கௌசலேந்திர சிங் படேல்
    - சுதா யாதவ்
    - அசாரி தலோஜ்
- பட்டியலிடப்பட்ட வகுப்பினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர்

ஆணையங்களுக்கு இணையாக இந்தப் புதிய ஆணையம் அரசியலமைப்பில் விதி 338B-யில் குறிப்பிடப்பட்டிக்கின்றது.




- ❖ இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு தேசியப் பட்டியலில் சாதிகளை சேர்த்தல் மற்றும் விலக்குதல் என்று முன்பிருந்த வரையறுக்கப்பட்ட நிலைமைக்கு எதிராக தற்போது இந்த ஆணையம் அவர்களின் குறைகளை கேட்க முடியும்.

## QS உலகப் பல்கலைக்கழக தரவரிசைகள்

- ❖ குவாக்கரேலி சைமண்ட்ஸ் (Quacquarelli Symonds - QS) நிறுவனத்தால் வெளியிடப்படும் ஒரு வருடாந்திர பல்கலைக்கழகத் தரவரிசைப்பட்டியல் QS உலகப் பல்கலைக்கழக தரவரிசையாகும்.
- ❖ முன்னதாக இது டைம்ஸ் உயர்கல்வி – QS உலகப் பல்கலைக்கழக தரவரிசைகள் என்று அறியப்பட்டது.
- ❖ இந்தியப் பல்கலைக்கழகங்கள் சமீபத்திய QS உலகப் பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியலில் தங்களது செயல்திறனை கடந்த வருடத்தைவிட முதல் 200 இடங்களில் 22க்கும் மேற்பட்ட துறைகள் 2019 ஆம் ஆண்டு பொருளில் பட்டியலிட்ட வகையில் உயர்த்தியிருக்கின்றன.
- ❖ உலகளாவிய முதல் 200 இடங்களில் IISc, IIM, IITs, நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் இருந்து 89 துறைகள் தரவரிசைப்படுத்தப்பட்டிருக்கின்றன.
- ❖ 20க்கும் மேற்பட்ட இதர தேசிய அமைப்புகளுடன் முதல் 200 பட்டியலில் துறைகளைக் கொண்டுள்ள வகையில் உலகளவில் இந்தியா தற்போது 21-வது இடத்தில் இருக்கின்றது.
- ❖ முன்னணி 50 பிரிவுகளில் மூன்று இடங்கள் டெல்லிப் பல்கலைக்கழகத்தால் மேம்பாட்டு கல்விக்கான நிலையில் 37-வது இடத்தில் என்றவாறு தரவரிசைப்படுத்தப்பட்டன.

## மென்பொருள் தயாரிப்புகள் மீதான தேசியக் கொள்கை - 2019

- மத்திய அமைச்சரவை இந்தியாவை ஒரு மென்பொருள் உற்பத்தி நாடாக மேம்படுத்திடும் வகையில் தேசிய மென்பொருள் தயாரிப்புகள் மீதான கொள்கை – 2019 என்ற கொள்கைக்கு ஒப்புதலளித்திருக்கின்றது.
- இந்தியாவை மேம்படுத்திடுவதற்கான இதன் கொள்கைகளாவன:
    - புதுமையின் மூலம் உலகளாவிய மென்பொருள் தயாரிப்பு மையம்
    - மேம்படுத்தப்பட்ட வர்த்தகமயமாக்கல்
    - நீடித்த மற்றும் நிலையான அறிவுசார் சொத்துரிமை
    - தொழில்நுட்பத் துவக்க நிறுவனங்கள் மற்றும் சிறப்பான திறன் வகைகளை ஊக்குவித்தல்.

## தேசிய கனிமக் கொள்கை - 2019

- மத்திய அமைச்சரவை தேசிய கனிமக் கொள்கை – 2019 என்ற கொள்கைக்கு ஒப்புதலளித்திருக்கின்றது.
- இது தற்போது நடைமுறையிலிருக்கும் தேசிய கனிமக் கொள்கை – 2008 என்பதை மாற்றுகின்றது.
- புதிய தேசிய கனிமக் கொள்கை மிகுந்த செயல்விளைவுடைய ஒழுங்குமுறையை உறுதி செய்யும்.
- இது எதிர்காலத்தில் நீடித்த சுரங்கத் துறை வளர்ச்சிக்கு வழிவகுப்பதோடு இத்திட்டங்களால் பழங்குடியினர் பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்கு ஏற்படக்கூடிய விவகாரங்களுக்குத் தீர்வுகளை அளித்திடும்.
- இது கனிமத் துறைக்காக நீண்ட காலத்திற்கு வேண்டிய ஏற்றுமதி – இறக்குமதி கொள்கையை முன்மொழிகின்றது.
- இது எதிர்காலத் தலைமுறைகளுக்கு ஆதரவளிப்பதற்காக தலைமுறைகளுக்கு இடையேயான பங்கு என்ற கருத்துருவை அறிமுகப்படுத்துகின்றது.
- மேலும் இது சுரங்கத் துறையில் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்வதற்காக ஒரு முறையை நிறுவனப்படுத்துவதற்கான அமைச்சரவை அமைப்பை ஏற்படுத்தவும் எண்ணுகின்றது.

## ரஞ்சனா தேசாய் தேடுதல் குழு

- லோக்பாலை நியமிப்பதற்கான நீதிபதி ரஞ்சனா தேசாய் தலைமையிலான தேடுதல் குழு ஊழல் எதிர்ப்பு அமைப்பான குறைதீர் மையத்திற்கு ஒரு தலைவர் மற்றும் எட்டு உறுப்பினர்களுக்கான தனது பரிந்துரைகளை இறுதிப்படுத்தியிருக்கின்றது.
- அந்தக் குழு லோக்பாலின் தலைவர் பதவிக்கு 5 நபர்களையும், லோக்பாலின் உறுப்பினர்கள் பதவிக்கு 24 நபர்களையும் கொண்ட பட்டியலை லோக்பால் தேர்ந்தெடுப்புக் குழுவின் தலைமைக்கு அனுப்பியுள்ளது.
- தேர்ந்தெடுப்புக்குழு பின்வருபவர்களை உள்ளடக்கியது.

- பிரதமர் – தலைவர்
- இந்தியாவின் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய்
- மக்களவை சபாநாயகர் சுமித்ரா மகாஜன்
- முன்னாள் அட்வகேட் ஜெனரல் முகில் ரோஹத்கி
- மல்லிகார்ஜன கார்கே – தேர்ந்தெடுப்புக் குழுவிற்கான சிறப்பு அழைப்பாளர்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## உலகின் முதல் பெண் ரோபோ செய்தி வாசிப்பாளர்

- ❖ சீன செய்தி நிறுவனமான ஜின்ஹீவா தனது முதல் பெண் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திலான செய்தி வாசிப்பாளரை பணியில் உபயோகித்திருக்கின்றது.
- ❖ இந்த செயற்கை நுண்ணறிவு கொண்ட ரோபோட் ஷின் ஷியாவ்மென்ங் எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- ❖ கண்காணிப்புக் கருவி முதல் தானியங்கி வாகனங்கள் வரை சீனா, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் தனது வலிமையை மேம்படுத்தத் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது.

# மாநிலச் செய்திகள்

## அரிசித் தகவல் வங்கி - அசாம்

- ❖ அசாமில் ஒரு விவசாய இணைய வாயிலான "அரிசித் தகவல் வங்கி - அசாம்" என்பது வெளியிடப்பட்டுள்ளது.
- ❖ அரிசி உற்பத்தித் தொழில்நுட்பங்கள், நுட்பமான உத்திகள், சிறந்த உற்பத்தி வழக்கங்கள் மற்றும் மாநில விவசாயத் தகவல்கள் ஆகியவற்றின் மீதான அறிவைப் பெருக்கிட இது அர்ப்பணிக்கப்பட்டிருக்கின்றது.




- ❖ உலக வங்கியால் நிதியளிக்கப்படும் திட்டமான இது விவசாய வியாபாரம் மற்றும் ஊரக உருமாற்றம் என்ற திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.


# முக்கிய தினங்கள்

## 43-வது குடிமைக் கணக்கு தினம் – மார்ச் 01

- இந்திய குடிமையியல் கணக்கு சேவைகள், 2019 ஆம் ஆண்டு மார்ச் 01-ம் தேதி புதுல்லியில் தனது 43-வது குடிமையியல் கணக்கு தினத்தைக் (Indian Civil Accounts Service - ICAS) கொண்டாடியிருக்கின்றது.
- இந்த வருட குடிமையியல் கணக்கு தினம், இந்தியக் குடிமையியல் கணக்கு அமைப்பின் தனித்துவத் திட்டமான பொது நிதி மேலாண்மை அமைப்பு என்ற திட்டத்தின் வளர்ச்சியைக் கோடிட்டுக் காண்பிக்கின்றது.
- இந்தியக் குடிமையியல் கணக்கு சேவை 1976 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் தனது நிலையை இந்நிறுவனம் சீராக உயர்த்தியிருக்கின்றது. மேலும் இது தொடங்கியதிலிருந்து மத்திய அரசின் பொது நிதி மேலாண்மையில் ஒரு முக்கியப் பங்கினை வகித்துள்ளது.

## உலக காதுகேட்புத் தினம் – மார்ச் 03

- உலக காதுகேட்புத் தினம் என்பது ஒவ்வொரு வருடமும் உலக சுகாதார நிறுவனத்தின் பார்வைக் குறைபாடு மற்றும் காதுகேளாமை ஆகியவற்றைத் தடுப்பதற்கான அலுவலகத்தால் மேற்கொள்ளப்படும் ஒரு பரப்புரையாகும்.




- இவ்வருடத்திற்கான கருத்துரு, "உங்கள் காதுகேட்புத் தன்மையை சோதியுங்கள்" என்பதாகும்.

- ❖ மக்கள் தங்கள் காதுகேட்புத் தன்மையை வழக்கமாக சோதித்துக் கொள்ளவும் ஒரு வேளை காதுகேட்புத் தன்மை இழக்கும் சமயத்தில் முன்கூட்டியே தலையிடவும் மக்களை அனுமதிக்க உதவும் ஒரு இலவச கைபேசி செயலியான "hearWHO" என்ற செயலியை உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ளது.

## உலக வனவுயிர் தினம் - மார்ச் 03

- ❖ ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை (United Nations General Assembly - UNGA) 2013 ஆம் ஆண்டு டிசம்பர் 20-ம் தேதியன்று நடைபெற்ற தனது 68-வது அமர்வின்போது மார்ச் 03-ம் தேதியை உலக வனவுயிர் தினமாக அனுசரிக்க முடிவு செய்தது.





- ❖ அழியும் தருவாயில் உள்ள வனவுயிர் மிருகங்கள் மற்றும் தாவரங்கள் ஆகியவற்றில் சர்வதேச வர்த்தகம் மீதான ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டதை இத்தினம் குறிக்கின்றது.
- ❖ தாய்லாந்தால் இத்தினம் உலகத்தின் வனவிலங்கு மற்றும் தாவரங்களைப் பற்றிய விழிப்புணர்வை அதிகப்படுத்தி அனுசரித்திட முன்மொழியப்பட்டது.
- ❖ 2019 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "நீருக்கடியிலான வாழ்க்கை: மக்களுக்காகவும் கிரகத்திற்காகவும்" என்பதாகும்.

## தேசியப் பாதுகாப்பு தினம் – மார்ச் 04

- ❖ தேசிய பாதுகாப்பு தினம் (National Safety Day - NSD) ஒவ்வொரு வருடமும் மார்ச் 04-ம் தேதி இந்தியாவில் அனுசரிக்கப்படுகின்றது.
- ❖ தேசியப் பாதுகாப்புக் குழுவை ஏற்படுத்திய நிறுவன தினத்தை இத்தினம் அனுசரிக்கின்றது.
- ❖ 1972-ம் ஆண்டில் முதல் தேசியப் பாதுகாப்புத் தினத்திற்கான பரப்புரை மேற்கொள்ளப்பட்டு அது முதல் ஒவ்வொரு வருடமும் அது தொடரப்பட்டு வருகின்றது.
- ❖ தேசிய பாதுகாப்புத் தினம் என்ற ஒற்றைத் தினமாக மார்ச் 04 தேதியன்று இது ஆரம்பிக்கப்பட்டது.

- தற்போது இந்த பரப்புரை மார்ச் 04 முதல் 11 வரையில் ஒரு வார காலத்திற்கு விரிவு செய்யப்பட்டிருக்கின்றது.




- - - - - - - - - - - - - - -